1369

உ

குருவேநம.

மதுரை கிருதமாலா தீரத்தில்
கோயில் கொண்டருளிய

# ஸ்ரீ பிரமானந்த சுவாமிகள்
# ஸ்தோத்ர கீதம்.

இது
ஸ்ரீ அத்வைதானந்த ஸ்வாமிகளின்
அனுக்ரகபலத்தால்

மதுரை,
**K. முத்துச்சாமி ஆச்சாரியாரால்**
இயற்றி:-

---

மதுரை,
**N. மதுரமுத்து ஆச்சாரி**
அவர்களால்,

மதுரை,
மனோன்மணி விலாசம் பிரஸில்,
பதிப்பிக்கப்பெற்றது.

1930.

O2:4198ல
N30.
176161

# குருபரம்பரை ஸ்தோத்ரம்.

## விருத்தம்.

பொன்னமரும் பூம்பதம்பிர் மானந்த பரமகுரோ
போற்றி போற்றி
நன்னயபா லானந்தா வரந்தருசுத் தப்பிர்மா
னந்தா போற்றி
இன்னிசைச்சங் கரானந்தா போற்றியெழின் மனுடவுரு
வெடுத்துத் தோன்றித்
தன்னருளா லெமையாண்டாய் அத்வைதா னந்தகுரு
சாமீ போற்றி.

உ

குருவேநம.

மதுரை, கிருதமாலாதீரத்தில்.

கோயில் கொண்டருளிய

# ஸ்ரீபிர்ஹ்மானந்த சுவாமிகள் தோத்ர கீதம்.

இது

மதுரை,

K. முத்துச்சாமி ஆச்சாரியார்

அவர்களால் இயற்றி

---

மதுரை, N. மதுரமூத்து ஆச்சாரி

அவர்களால்,

மதுரை.

மனோன்மணி விலாச அச்சியந்திர சாலையிற்,

பதிப்பிக்கப்பெற்றது.

1930.

உ

குருவே நம:

# ஸ்ரீபிர்ஹ்மானந்த சுவாமிகள்மீது

# கீர்த்தனை.

காப்பு வெண்பா.

ஆனந்த வாழ்வே யடியேன் பிழைபொறுத்து
ஞானந் தரும்பிரமா னந்தமே—மோனவின்ப
யுத்திரத்தி னுகார வுறவேயென் னுள்ளிருந்து
சித்தியெல்லாந் தந்துகடைத் தேற்று.

இ-ம்-கல்யாணி-தா ம்-ஆதி.

பல்லவி.

குருவேநமோ பிரமானந்தஸ்ரீ (கு)

அநுபல்லவி

குருவேநமோ கூடஸ்தாநமோ
அருவே யுருவே அத்வைதாதி பூஜித (குரு)

சரணம்.

சமுகாநமோ சற்ஜனேபரீ சமுகாநமோ
அமிர்தாநமோ அபயா நமோ
சுமுகாசுக்ஞான துரியாதித ஜோதி (குரு)

நிர்த்தொந்தா நமோ நித்யகாப்ரபோ நிர்த்
வித்தகாநமோ விபுக்தா நமோ
முத்துஸ்வாமிப்ரீத மோனபிர்ஹ்மானந்த (குரு)

Q2:4798w
N30

இ-ம்-ஸைபரவி-தா-ம்-ஆதி.

பல்லவி.

நீகுருபரகருணே தயாஸ்வாமி (நீ)

அநுபல்லவி.

நிகிலலோ காதரா பிர்ஹ்மானந்தா (நீ)

சரணம்.

பாராசொரூபா தூராசமீபா
வீராவிக்ஞானோப காராஜெயசம்பரம (நீ)
ஹாமானுபாவா அடியோமைக்காவா
பாமதூர முத்துஸ் வாமிபூஜாநிதி (நீ)

இ-ம்-நவரோஸ்-தா-ம்ஆதி.

பல்லவி.

இன்னமலேக்கின்றாயே மனமே இதில்
ஏதுசொல்குவாய் ப்ரயோசனமே

அநுபல்லவி.

தன்மயம்சர்வசாட்சி ஜகம்பொய்யிரண்டும்பூச்சி
உன்மயமேயிக்காட்சி உண்மையுணர்ந்தும்சீச்சி (இ)

சரணம்.

நற்றவம் ஸ்ரவணாதி தேட்டு மற்ற
நடனவே டங்கள்விளை யாட்டு
கற்றதிறமை யெல்லாம் போட்டு ஞான
கைவல்ய மேபடிக்கும் பாட்டு
முற்றும் அனந்தஜென்மா மோகசஞ்சிதகன்மா
பற்றும் ஞானத்தியின்மா பஞ்சென்றறிந் தும்சும்மா (இ)

இந்த்ர னெடுப்பானுடல் கீடம் அந்த
இந்த்ர வுடலெடுக்கும் கீடம்
தொந்த வுடல்கள்பல வேடம் இதைச்
சுகமென் றலைந்தாயென்ன மூடம்
எந்தையஸ்வத்தன்மெய்க்கும் இணையடிகளென்றைக்கும்
தந்துசுகத்தேவைக்கும் சகலலோகமும்பொய்க்கும் (இ)

மிகநல்ல நரஜென்மம் பிடித்தாய் அதில்
வேதாந்த சாஸ்திரம்சிலபடித்தாய்
ஜகமதிக்கவிரித்து முடித்தாய் முத்துச்
சாமிநா னென்றுதமுக் கடித்தாய்
அகம்பிர்ஹ்ம மந்த்ரம்கொண்டு மனுபவம் ஆப்தர்விண்டும்
சுகந்துக்கங் களிரண்டும் சொற்பன மாகக்கண்டும் (இ)

இ-ம்-தனுசரி-தா-ம்-ஆதி.

கண்ணிகள்.

ஆனந்தம் ஆனந்தம் ஆனந்தம் ஆனந்தம்
ஆனந்தம் ஆனந்தம் பிர்ஹ்மானந்தம்
அகண்டபூர்ணமா யாவுமாயல்லதுமாய்
ஆடல்புரிவதுவும் பிர்ஹ்மானந்தம்

நிர்த்தொந்த நிர்விஷய நிஷ்கள நிர்விகார
நிற்குணஜோதியும் பிர்ஹ்மானந்தம்
நேதிமார்க்கத்திலே மீதியாம் அச்சுவத்த
நாதசொரூபமும் பிர்ஹ்மானந்தம்

கூடலந் துவாதசாந்த கிருதமாலா தீரத்தில்
கோயில்கொண் டருள்வதும் பிர்ஹ்மானந்தம்
கூறும்பா லானந்த சுவாமியும்சுத்தப் பிரம
குருவடி வானதும் பிர்ஹ்மானந்தம்

திவ்யசங்கரா னந்தர் அத்வைதா னந்தஞான
தேசிகரான தும் பிர்ஹ்மானந்தம்
ஜென்மமனேகமென் சிந்தையுள் ளிருந்தென்னைத்
தேற்றிரக்ஷித்ததுவும் பிர்ஹ்மானந்தம்

இன்னுமன்பரைக்காக்க மானிடவேடமெடுத்
தெடுத்துவருவதுவும் பிர்ஹ்மானந்தம்
ஈனர்க்குளீனனிவ னென்றுதெரிந்துமென்னை
ஏற்றுக்கொண்டகுருவும்பிர்ஹ்மானந்தம்

உள்ளுக்கும் புறம்புக்கும் ஒருபடியாகவே
யூடுருவிநிற்பதும் பிர்ஹ்மானந்தம்
எள்ளுக்கும் புகழ்ச்சிக்கும் எட்டப்படாதபே
ரின்பமாயிருப்பதும் பிர்ஹ்மானந்தம்

எட்டுப்ரமாணங்களும் எட்டியெட்டிப் பார்க்கினும்
எட்டாமலுயர்ந்தது பிர்ஹ்மானந்தம்
எம்பெருமான்றிருச் சன்யதானமடைந்தார்க்
கெளிதிற்கிடைப்பதுவும் பிர்ஹ்மானந்தம்

ஜீவேஸ்வரஜகத்து திர்ஷ்யமாவதெல்லாம்
சித்மயமாவிளக்கும் பிர்ஹ்மானந்தம்
தேடாமற் றேடுமன்பர் தேட்டத்திலேகிடைத்த
செம்பொருளானதுவும் பிர்ஹ்மானந்தம்

இ-ம் நாதநாமகிரியை-தா-ம்-ஆதி.

பல்லவி.

தெரிந்திலேயே மனமே வந்த
தேகம் அழியு முனமே

## அநுபல்லவி.

நரிபரியாயனந்த தேகங்க ளெடுத்தும்
நாசகாலன் கையில் விடுத்தும்
பிரிதென்ன புண்யமோ நரஜென்ம மடுத்தும்
பிர்ஹ்மானந்த யுத்தியைத் தினஞ்சொல்லிக்கொடுத்தும் ()

## சரணம்

அறிவுடெழுந்ததன்றோ பரமுட னிகமே
ஆனந்தமன்றி யுண்டோ சுகமே
நெறியூடுநின்றபிர்ஹ்மா னந்தகற் பகமே
நினைத்ததெல்லாங் கொடுக்கும் ஞானசமுகமே (தே)

ஊனவுடலையன்றோ நானென்று மதித்தாய்
ஓயாப் பிறப்பிறப்பை விதித்தாய்
மானபிமானச்சேற்றி லுன்னை நீ பதித்தாய்
மரத்திடுக்கிற்குரங்கா மடையரைத்துதித்தாய் (தே)

விஷயவிச்சையில்நீ ராக்ஷஸ தருணன்
மேல்கீழாய்ச் சுழல்வதி லருணன்
அசத்துப்ர சங்கமழை பொழிவதில்வருணன்
ஆத்மசிரவணத்தில் நீகும்ப கருணன் (தே)

ஞானமுழுச்சுகட்கோ ருதவியும் புரியாய்
நன்மையதிலுண் டென்று தெரியாய்
மானமனைக்குழைத் தாய் நாயா நரியா
மண்ணும்விண்ணுஞ்சுழன்றா யுனக்கிது சரியா (தே)

சாமிபிர்ம்மானந்தர் சமுகத்திற் சென்று
தாளில்விழுந் தெழுந்து நின்று
நேமனதொண்டு செய்து வாழ்வதே நன்று
நில்லாவுலகவின்பங் கானல்நீ ரென்று (தே)

சிருட்டிகாலந்தொடங்கி நீதுணை யன்றோ
தேகம்வந்து போனதும் ஒன்றோ
மருட்டுமாயையி லின்ன மயங்கினால் நன்றோ
மகத்வகுருவைத்தேடி யடையுநா ளென்றோ (தே)

ஜாதிபேதங்களால் ஜீவரை மருட்டி
சமயக்கலகம் செய்து வெருட்டி
வேதரிஷிகள்சொன்ன விதியிதென் றுருட்டி
வீணர்கெடுவாரதி லுனக்கென்ன திருட்டி (தே)

நேதிசன்மார்க்கத்தி னில்லாமற் போயே
நினைப்பு வடிவமான நீயே
சாதகன்போல்வந்து தடைசெய்கின் றாயே
தலைவிரித் தாடியெங்கும் அலைகின்றாய் பேயே (தே)

ஒருகாரியமின்றிச்செல் வாய்நெடுந் தூரம்
உனக்கெனும் அதிலுண்டோ சாரம்
குருசொன்ன வாக்யங்கள் த்யானிக்கு நேரம்
கொண்டுவந் தாயனந்த ஜெகவிப காரம் (தே)

பளிக்கறை நாயொன்றே சுவர்தொறுங்குரைக்கும்
பாவனையே ஜெகத்தாய்ப் புரைக்கும்
வெளிப்படை யனுபவம் யுத்திநா லுரைக்கும்
விபரமிப்படியென்று நாளது வரைக்கும் (தே)

இ ம்-தோடி-தா-ம்-ஆதி.

பல்லவி.

ஹிர்தயாலயஸ்வாமிஹேஸா நமோ
எனையாண்டகுருகன ஜோதி (ஹி)

அநுபல்லவி.

மதவாகம அகோசராற்புத
மகாவாக்ய தத்தொம்பத
சுகாரோக்ய சத்தம்ப்ரமபதி (ஹி)

சரணம்.

பேதையேன்செய் பிழைகள்பொறுத்து
பிர்ஹமானந்த யுத்திகரம்சிறுத்து
வாதனுதிதுர்ப் பகைபடையறுத்து
வந்திதவடியார்சேவை தந்தருள்கற் பகதேவதரு (ஹி)

தபசேத்ரவிக் ஞானப்ரபோதா
ஜகாதிமோகவிச் சித்ரவிநோதா
உபமான்யர கிதபொற்பாதா
உளங்கடொறுமகமகமென விளங்குமுத்தமகருணாநிதி(ஹி)

---

## தாலாட்டு.

பேரே பெரிதே பிரமானந் தக்கடலே
ஊரே யுறவே யுணர்வேநீ கண்வளராய்.

உள்ளான வுன்னை யுணராத பாவியென்று
தள்ளாம லாண்ட தயவேநீ கண்வளராய்.

## திருப்பள்ளி எழுச்சி.

ஆவா யழிவா யழியாத நீயானுல்
தேவா வுனது திருவிளையாட் டென்னசொல்வேன்.

அண்டர் தவத்தா லடையாத வாரமுதே
தொண்டர் சுகிக்கும் சுகமே யெழுந்தருளே.

# பிர்ஹ்மானந்த சுவாமிகள்
# கிளிக்கண்ணி.

## காப்பு வெண்பா.

எந்தைபிர மானந்த னின்பவடிக் கன்புசெயும்
சொந்த வடியார் துணைவேண்டி—வந்த
கிளியாய நெஞ்சேயுன் கிஞ்சிக்கும் விட்டு
வெளியா விநாயகனை வேணடு.

## கண்ணிகள்.

சுத்தப்பிரமானந்த துதிக்கைவிநாயகனைப்
புத்திக்குள் வைத்தாயடி கிளியே
புண்யமெல்லாம் பெற்ருயடி.

ஆனந்தமானதெய்வம் அடியார்முன்வந்ததெய்வம்
ஞானங்கொடுத்த தெய்வம் கிளியே
நங்கள்பிர்ம்மா னந்தனடி

அங்கரதம் நடத்தி அடியேன்முன் வந்தகுரு
எங்கும்நிறைந்தகுரு கிளியே
எங்கள்பிர்ம்மா னந்தகுரு

தன்னைக்கொடுத்ததெய்வம் தாணுக்கிக்கொண்டதெய்
அன்னை தந்தை யானதெய்வம் கிளியே [வம்
அஸ்வத்ததெய்வமடி

தேவர்க்குந்தேவர்போற்றுந்தெய்வமெங்கள்பிர்ம்மா
கோவிற்பணி செய்வதற்கு கிளியே [னந்தர்
கோடிதவம் வேண்டுமடி

திரிகரணசுத்தியாகச் சேவைசெய்யுமன்பர்களைப்
பரிபூர்ணமாக்குமடி கிளியே
பாலகுருபாதமடி

எல்லாந்தெரிந்தகுரு என்பிழைமீதே ருதகுரு
சொல்லாமற் சொன்னகுரு கிளியே
சுத்தப்பிர்ம்மா னந்தகுரு

மாயாந்தகாரத்திலே மயங்கிச் சுழலுமென்னைத்
தாயாகி யாதரித்தான் கிளியே
சங்கரா னந்தகுரு

அன்பர்க்கருள்குருவாம் அத்வைதன் பாதசேவை
இன்பசொரூபமடி கிளியே
இகபரலாபமடி

அத்வைதானந்தஸாமி யருட்கிளி பாடுமன்பர்க்
கெத்தெய்வம் வேறுமடி கிளியே
இவனன்றோதெய்வமடி

இல்லாதமாயைநெஞ்சம் இறைவனொருசொல்லாலே
சொல்லாமற்போனதடி கிளியே
சுகமேநீ யானையடி

ஆற்றுமடியார்க்கருளும் அஸ்வத்தநாதன்பாதம்
போற்றுமன்பர்க் கேவல்செய்ய கிளியே
புண்ணியம்நான் செய்திலனே

தினமும்பிரமானந்தர் சேவடியார்க் கேவல்செய்ய
கனவேனுங் காண்பேனோடி கிளியே
கண்ணேகண் ணுவேனோடி

அற்பமனே மாயையெல்லாம்அறிவாகக்காணவொரு
சொற்பனம்நான் காண்பேனோடி கிளியே
ஜோதிமய மாவேனோடி

சொல்லொன்றி லேதனது சொருபம் தெரித்தகுரு
நில்லென்றுசொன்னபடி கிளியே
நின்றுதெளிந் துய்வாயடி

ஆதியையென்குருவை அத்வைதபேரின்பத்தை
நேதியிற்காண்பாயடி கிளியே
நீயதுவாய் நிற்பாயடி

கஷ்டப்பிறப் பிறப்பாம் கனவிற் சுழலுமென்னைத்
தட்டிவிழிக்கவைத்த கிளியே
தயவென்னசொல்வேனடி

பஞ்சபூதங்களாலும் பவ்திகதேப் வங்களாலும்
அஞ்சியடைந்தவரை கிளியே
ஆதரித்ததெய்வமடி

பூரணமானகுரு போதனையினாலனந்த
காரணமாமவித்தை கிளியே
காணுதிறந்ததடி

ஆசிலனந்தஜன்மா அடியேன்றனுள்ளிருந்து
பேசியுருக்கொண்டுவந்தான் கிளியே
பேரருளென்சொல்வேனடி

துற்சங்கநிவிர்த்தியும் சுயேச்சையும் சாதனமும்
சற்சங்கம்செய்தவர்க்குக் கிளியே
தானேகிடைக்குமடி

உன்பொருட்டாகவன்றோ ஒருகோடிநாமமடி
என்பெருமான் பாதங்கட்குக் கிளியே
யென்னபெயர் சொல்வேனடி

கட்டியகோட்டையைந்துங் காவலிருட்கிடங்கும்
விட்டுவெளியானேனடி கிளியே
விமலன்கிருபையடி

தேட்டந்திரண்டுவந்த திருமேனிகண்டவர்க்கு
வாட்டங்களில்லையடி கிளியே
வரவுபோக்கில்லையடி

உண்டாற்குறையுமடி யுலகசிற்றின்பமெலாம்
கொண்டாற்பெருகுமடி கிளியே
குருநாதன் தந்தசுகம்

அரவக்கடியுண்டோனு லாமோகருடமந்த்ரம்
குரவனருளினல்லாற் கிளியே
கொண்டவினை தீராதடி.

அந்தமிலாவானந்த அருளொருமானிடமா
வந்ததயவைச்சொல்ல கிளியே
வாயனந்தம் போதாதடி

கல்லாய்க்கிடந்தேனில்லைக் காய்மரமாய்நின்றேனில்
புல்லாய்முளைத்தேனில்லை கிளியே [லை
புண்யகுருசன்னதியில்

மோகஞ்சிலவந்தாலு மூன்றுநிலம்வந்தவர்க்குத்
தேகஞ்சில வந்தாலுமே கிளியே
சிவமாவாரென்றானடி

புத்தப்புதுமையென்றான் புவனங்கடந்ததென்றான்
மெத்தப்பேரின்பமென்றான் கிளியே
மேலேழுபூமியடி

பிறப்புமிறப்புந்துன்பம் பிணஞ்சுமத்தல்காத்தல்துன்
மறப்பில்மயங்கியன்றோ கிளியே [பம்
வாழ்க்கையென்று யென்றானடி

பனையின்சிறுநிழலிற் பாரமிறக்கிவைத்துத்
தினைபின்பமில்லையன்றோ கிளியே
சிற்றின்பமில்லையென்றான்

ஜாதிபேதங்களெல்லாம் ஜடத்தினுமில்லையென்றான்
எதிலிருந்ததென்பாய்க் கிளியே
இதுவென்னமோசமடி

அஞ்சன்றியாறில்லை அவையன்றிலோகமில்லை
நெஞ்சன்றியஞ்சுமில்லை கிளியே
நீயன்றியில்லையென்றான்

காசியினீராடினாலுங் கர்மம்பலதேடினாலும்
வாசியையுள் மூடினாலும் கிளியே
வாதனைகள்போகா தென்றான்

நெற்பரமேலேற்றுங்கோழி க்தமுங்கிளைக்கு மய்யன்
சிற்பரமேலேற்றினாலும் கிளியே
தினங்கிளைக்கின்றாயடி

விவரீதவாதனைபால் விர்த்திபலவந்தாலுமே
தவமென்றுகாண்பவரே கிளியே
தானாவாரென்றாண்டி

யாகாதிமந்த்ரங்களால் போகாதபந்தங்கையா
லாகாமற்போனதடி கிளியே
அகம்பிர்ம்ம மந்திரத்தால்

உள்ளதுபோதமென்றான் உலகமுணர்வேயென்றான்
வெள்ளம்வெங் கானலென்றான் கிளியே
வெங்கானல்சூர்யனென்றான்

ஊனாதிலோகமெல்லா முணர்வன்றியில்லையென்றான்
நானாதிபிர்ம்மமென்றான் கிளியே
நசிப்புதிப்பில்லையடி

வெட்டவெளிக்கட்டையிலே வெகுநாளிருந்தகள்ளன்
கட்டையிலேபாய்ந்தானடி கிளியே
கண்யகுருபார்வையிலே

பண்டில்லாதேயிருந்த பாம்புபழுதையின்மேல்
கண்டதுபோற்கண்டாயென்றான் கிளியே
கற்பனையாவந்தவுடல்

சித்தென்றமேடையிலே ஜெகநடனமாடையிலே
வஸ்துறவைமறந்தலவோ கிளியே
மாறாட்டமாய்த்தோன்றுமென்றான்

யாவத்செயல்களுந்தன் னருட்செயலென்றவையன்
ஜீவச்செயல்சொன்னானடி கிளியே
தேகோகம னத்திற்கன்றோ

ஓடும்பிராணனுடன் ஓரறிவுங்கூடினதால்
நாடுமனமானதென்றான் கிளியே
நானகர்த்தாவென்றானடி

புனலிட்டசட்டியின்மேற் பொருந்துங்கனலதுபோல்
மனதற்றவான்மாவிலே கிளியே
வந்தமமேனைமாயையென்றான்

அந்தக்கரணத்திற்கும் ஆன்மாவறிவினுக்கும்
தொந்தமுண்டானதுவே கிளியே
தோற்றமாஞ்ஜீவனென்றான்

பிரத்தியக்கான்மாவென்றும் பிரிவாங்கூடஸ்தனென்
பரத்தேருமீசனென்றும் கிளியே [றும்
பாவனையேஜீவனென்றான்

மண்ணிற்கடமுமில்லை மண்ணன்றிஹேதுவில்லை
விண்ணிற்ஜடமுமில்லை கிளியே
விண்ணன்றியில்லையென்றான்

ஆதாரம்ஏகமென்றான் ஆரோபமனேகமென்றான்
காதாரக்கேட்கிலையோ கிளியே
கயிற்றைப்பாம்பென்றாயடி

சொருபஞானமென்பதைச் சுழுத்தியிற்பாரென்றான
நிருபாதிவிர்த்திஞானம் கிளியே [டி
நேதியிற்பாரென்றானடி

176161
92:41980
N30

பொன்னிலெழுந்தொடுங்கும் பூஷணதிநாமரூபம்
என்னிலெழுந்தொடுங்கும் கிளியே
இகபரங்களென்றானடி

பொன்வடிவங்காட்டியதில் பூண்வடிவமில்லையென்றான்
தன்வடிவங்காட்டியன்றோ கிளியே
ஜகவடிவம்பொய்யேயென்றான்

நானாவிதமாத்தோன்றும் நாமரூபங்களெல்லாம்
தானாவிளங்குவதே கிளியே
சத்சிதானந்தமென்றான்

ஜகத்தைக்குறித்துவந்த சத்சிதானந்தமுதல்
அகத்தைத்தெரிக்கவையன் கிளியே
அனந்தகுணம் சொன்னானடி

விதிவிலக்குங்குணங்கள் வேறல்லஆன்மாவிற்கு
மதிவிளக்குமாணவர்க்காய் கிளியே
வந்தகுணமென்றானடி

ஆசைப்படாதவின்பம் அன்னியமில்லாதவின்பம்
பேசப்படாதவின்பம் கிளியே
பேரின்பமென்றானடி

இன்றுமிருக்கின்றசுக மினிமேலிருக்குஞ்சுகம்
அன்றுமிருந்தசுகங் கிளியே
அஞ்சுகமேயென்றானடி

சின்மயமாகவெல்லாந் தெரியத்தெளிவுதந்து
தன்மயமாக்குமடி கிளியே
சத்குருவின்பாதமடி

கூற்றுவனுக்குமற்றக் குயவற்குமச்சமின்றி
வீற்றிருக்கவைத்ததடி கிளியே
வேதகுருபாதமடி

ஒன்றேயுணர்ச்சியென்றும் உலகம்பொய்த்தோற்றமெ
நன்ருய்த்தெரித்தானடி கிளியே [ன்றும்
நானேநானென்ருனடி

தள்ளாமலாண்டானடி தன்னையுந்தந்தானடி
வள்ளல்திருவடியைக் கிளியே
மறந்திருக்கக்கூடுதில்லை.

## ஒயில்கும்மி.

கற்பங்கடந்த முனிவரமரர்க்குங்
காணற்கரியபிரமானந்தம்
கழல்வைத்தசி ரவணப்பொருள் மனனத்திடை தெளிவுற்
கண்டடைசற் கெளிதானதடி. [றவர்

கோடானுகோடி சுருதிகளினலுங்
கோசரிக்கொண்ணுத கோலமடி
குருவாயெதி ரொருமானிட வுருவாவரு கிருபாகர
கோமான்சொல்ல விளங்குமடி,

புல்லர்சங்கத்தொடு கூடாமற்கெட்ட
போதனையைக்காதிற் போடாமல்
புத்தித்தரு வெத்தித்தரு முத்திக்கருள் யுத்திப்பிர
போதரத்னகரம் பாடுங்கடி.

காசிநீராடிக்கா டோடினலுந்தவங்
கன்மயோகநிட்டை கூடினலும்
கடப்பரிய பிறப்புவரி கணத்திலெம தருட்குரவர்
காற்றாசிக்கெளி தானதடி.

நித்தியவின்ப சுகந்தேடி யதில்
நிற்குமுத்தமரு டன்கூடி
நேசத்தொடு பேசிப்பல தோசக்குண மாசற்றிட
நேதிமார்க் கந்தனிற்கூடுங்கடி.

## வேறு.

ஆறுபகைவர் தலைசாய அவ
ராதிக்கமுங்கெட் டடிமாளக்
கூறுமகம்பிர்ம மந்திரவாளென்கைக்
கொடுத்தவீரக் கழல்வாழ்க.

பாவியிவனென்று நல்லடியார்கள்
பலதரஞ்சொல்லியுங் கேளாமற்
சேவடித்தூசியென் சென்னியிலிட்ட
திருவருட்கென்னகை மாறுசெய்வேன்.

காயமோடாவிப் பொருள்தந்துருகித்தங்
கண்பனித்தன்பர் கடையினிற்க
நாயைப்பிடித்து நடுவீட்டில் வைத்த
நாதன் தயவென்ன சொல்வேனடி.

கானல்ஜலப்பொங்கும் நட்டாற்றிற்றேகா
காரச்சுழலிற் றலைகிழாய்
மானக்கராவின் மடியாதெடுத்தென்னை
வாழ்வித்தவல்லப மென்னசொல்வேன்.

பேதித்தபேதமும் நானெனதென்கின்ற
பித்துந்தவிர்த்த பெருமானார்
ஜாதிப்பசாசு மதப்பேயும் நின்று
தாண்டவமாடச் சகிப்பாரோ.

எத்தனைஜென்மங்கள் போனாலு மின்ன
மெத்தனைஜென்மங்கள் வந்தாலும்
நித்தியானந்தமா நானிருக்க நல்ல
நிச்சயந்தந்த குருவாழ்க.

அறுசீர் விருத்தம்.

மயிலாவெள் ளோதிமங்காள் மழவிடைகாள் வான்கருட
வர்க்கங் காணீர்
வெயிலாகாற் றுமழையா வெனப்பாரா துதினம்வரு
வீரிங் கென்னே
குயிலாபிர்ஹ் மானந்தர் சன்யதா னத்தில்வந்து
குழுமி யின்பம்
பயிலாநிற் கின்றபடி யாலவரைச் சுமந்துகொண்டிப்
படிவந் தோமே.

கட்டளைக் கலித்துறை.

பண்டுங் கிருத நதிக்கரை மேவும் பழக்கத்தினல், நண்டுங்கை கூப்பித் தொழும்பிர மானந்த நாதனடித், தொண்டுண்டு தொண்ட ரடித்தூளுண் டுண்டு சுகானந்த முண், டுண்டுண்டுண் டுண்டுண்டுடு டுண்டுண்டுண் டென்னு மண் டுகங்களே

எழுசீர் விருத்தம்.

கவரினுங் குறையாச் செல்வமே தெய்வக்
கற்பக மேயுனக் கன்பு
தவறினுந் தவறு தபடிவந் தெடுத்துத்
தடுத்தெனை யாட்கொள வேண்டும்
உவரினு முவர்த்த மனத்தனை நீயே
உணர்வெனு வுணர்த்திய வுணர்வே
எவரினும் பெரியா யெம்பெரு மானே
யிறைவாபிர்ஹ் மானந்த குருவே.

வேறு விருத்தம்.

படிப்பெ லாம்பிறர் வியந்திடப் படிப்பெனோர்
பயன்பெறப் படித்தில்லேன்
துடிப்பெ லாம்பணம் பணமெனத் துடிப்பெனோர்
சுகம்பெறத் துடித்தில்லேன்
பிடிப்பெ லாமட வாரிடத் தலதுநின்
பதங்களிற் பிடிப்பில்லேன்
நடிப்பெ லாந்தெரு நாடக நடிப்பெனின்
நாயினுக் கருளாயோ.

அல்லெ லாமரும் பகலெலா மடந்தையர்க்
காளெனு விருக்கின்றேன்
பல்லெ லாந்திறந் தசடர்பா லிரப்பெனுன்
பக்கல்நின் றிரந்தில்லேன்
சொல்ல லாந்தின்ன லாமென்ப னலதுயிர்க்
கொலைசெயப் பயந்தில்லேன்
கல்லெ லாமுரு கினுமுரு காதவென்
கன்மன முருக்காயோ.

புண்பு லாலுண விரும்பின னலதுவெண்
பொடியுண விரும்பில்லேன்
என்பெ லாமியான் யானென்ப னன்றியான்
இன்னமுந் தெரிந்தில்லேன்
அன்பெ லாமெழின் மாதர்பா லன்றியுன்
அடியவர்க் கன்பில்லேன்
துன்பெ லாமுடை யேன்மடை யேற்கொரு
சுகமினித் தாராயோ.

ஏடெ லாம்படித் திடநினைப் பேனென்றை
எழுத்தறப் படித்தில்லேன்
வீடெ லாமக்கண் மனைபெலா மெனதென்றேன்
வீட்டின்ப முணர்ந்தில்லேன்
நாடெ லாந்திரிந் தேனுன்றன் சன்னதி
நணுகிலேனென் செய்கேன்
கேடெ லாங்குடி யிருக்குமென் மனத்துணீ
கிருபைவைத் திருக்காயோ.

வாழி.

இடங்கானல் வெள்ளம் பிரபஞ்ச மாக்கண்டு தள்ளி யென்றும், இடங்காண நின்ற பிரமானந்த னன்பர் திருவுளத்தின், இடங்தோறும் நின்று பெருகித் ததும்பி யெழுந்துநிறைந், தடங்காத பேரின்ப முவாழி வாழியென் னுவனுமே.